ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ போதலர்ந்த ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ போதலர்ந்த ॥

## திருத்தேவனார் தொகை

‡போதலர்ந்த பொழிற் சோலைப்⋆ புறம் எங்கும் பொரு திரைகள்⋆
தாதுதிர வந்தலைக்கும்⋆ தட மண்ணித் தென் கரைமேல்⋆
மாதவன் தான் உறையும் இடம்⋆ வயல் நாங்கை⋆ வரி வண்டு
தேதெனவென்றிசை பாடும்⋆ திருத்தேவனார் தொகையே (1)

யாவருமாய் யாவையுமாய்⋆ எழில் வேதப் பொருள்களுமாய்⋆
மூவருமாய் முதலாய⋆ மூர்த்தி அமர்ந்துறையும் இடம்⋆
மா வரும் திண் படை மன்னை⋆ வென்றி கொள்வார் மன்னு நாங்கை⋆
தேவரும் சென்றிறைஞ்சு பொழில்⋆ திருத்தேவனார் தொகையே (2)

வா நாடும் மண் நாடும்⋆ மற்றுள்ள பல் உயிரும்⋆
தானாய எம் பெருமான்⋆ தலைவன் அமர்ந்துறையும் இடம்⋆
ஆனாத பெருஞ்செல்வத்து⋆ அரு மறையோர் நாங்கை தன்னுள்⋆
தேன் ஆரும் மலர் பொழில் சூழ்⋆ திருத்தேவனார் தொகையே (3)

இந்திரனும் இமையவரும்⋆ முனிவர்களும் எழில் அமைந்த⋆
சந்த மலர்ச் சதுமுகனும்⋆ கதிரவனும் சந்திரனும்⋆
எந்தை! எமக்கருள் என நின்று⋆ அருளும் இடம் எழில் நாங்கை⋆
சுந்தர நல் பொழில் புடை சூழ்⋆ திருத்தேவனார் தொகையே (4)

அண்டமும் இவ்வலை கடலும்⋆ அவனிகளும் குல வரையும்⋆
உண்ட பிரான் உறையும் இடம்⋆ ஒளி மணி சந்தகில் கனகம்⋆
தெண் திரைகள் வரத் திரட்டும்⋆ திகழ் மண்ணித் தென் கரைமேல்⋆
திண் திறலார் பயில் நாங்கைத்⋆ திருத்தேவனார் தொகையே (5)

ஞாலம் எல்லாம் அமுது செய்து⋆ நான்மறையும் தொடராத⋆
பாலகனாய் ஆலிலையில்⋆ பள்ளி கொள்ளும் பரமன் இடம்⋆
சாலி வளம் பெருகி வரும்⋆ தட மண்ணித் தென் கரைமேல்⋆
சேல் உகளும் வயல் நாங்கைத்⋆ திருத்தேவனார் தொகையே (6)

www.prapatti.com

ஓடாத வாளரியின்⋆ உருவாகி இரணியனை⋆
வாடாத வள் உகிரால்⋆ பிளந்தளைந்த மாலதிடம்⋆
ஏடேறு பெருஞ்செல்வத்து⋆ எழில் மறையோர் நாங்கை தன்னுள்⋆
சேடேறு பொழில் தழுவு⋆ திருத்தேவனார் தொகையே (7)

வார் ஆரும் இளங்கொங்கை⋆ மைதிலியை மணம் புணர்வான்⋆
கார் ஆர் திண் சிலை இறுத்த⋆ தனிக் காளை கருதும் இடம்⋆
ஏர் ஆரும் பெருஞ்செல்வத்து⋆ எழில் மறையோர் நாங்கை தன்னுள்⋆
சீர் ஆரும் மலர் பொழில் சூழ்⋆ திருத்தேவனார் தொகையே (8)

கும்ப மிகு மத யானை⋆ பாகனொடும் குலைந்து வீழ⋆
கொம்பதனைப் பறித்தெறிந்த⋆ கூத்தன் அமர்ந்துறையும் இடம்⋆
வம்பவிழும் செண்பகத்தின்⋆ மணம் கமழும் நாங்கை தன்னுள்⋆
செம் பொன் மதிள் பொழில் புடை சூழ்⋆ திருத்தேவனார்
தொகையே (9)

‡கார் ஆர்ந்த திருமேனிக்⋆ கண்ணன் அமர்ந்துறையும் இடம்⋆
சீர் ஆர்ந்த பொழில் நாங்கைத்⋆ திருத்தேவனார் தொகைமேல்⋆
கூர் ஆர்ந்த வேற் கலியன்⋆ கூறு தமிழ் பத்தும் வல்லார்⋆
எர் ஆர்ந்த வைகுந்தத்து⋆ இமையவரோடிருப்பாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com